
# திராவிடத்தால் வாழ்கிறோம்

953

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

27

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# கலைஞரின் திரும்பிப்பார்; கசப்பு மருந்து!





சமத்துவம், சமதர்மம் எனும் கசப்பு மருந்தை, வசனம் எனும் தேனில் கலந்து மக்களுக்குப் புகட்டிய படம் ‘திரும்பிப்பார்’ அதை சாதித்த சமூக மருத்துவர் கலைஞர்!

“அன்பு, தொண்டு, நேர்மை இவற்றை உதறியெறிந்துவிட்டு, இன்ப பூமியின் ஏகபோக உரிமையாளன்தானே என எண்ணிக்கிடந்தவன், கடைசியில் தான் கடந்து வந்த வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தான் அதுதான் திரும்பிப்பார்” என இந்தப் படத்துக்கு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

1952-இல் சிவாஜி கணேசன் கதாநாயகனாக அறிமுகமான கலைஞரின் பராசக்திக்குப் பின்னர், அவர் நடித்த நான்காவது படம். 1953-ஆம் ஆண்டில் இந்தப் படம் வெளியானது. கலைஞரின் வசனத்தை மீண்டும் மீண்டும் பேசி நடித்து, மக்கள் மனதில் சிவாஜி கணேசன் அழுத்தமாகப் பதிந்தார்.

1953-ஆம் ஆண்டு கலைஞரின் கதை வசனத்திலும், டி.ஆர்.சுந்தரம் இயக்கத்திலும் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பிலும் வந்த படம். சிவாஜி கணேசன் (பரந்தாமன்), பண்டரிபாய் (பூமாலை) நரசிம்மபாரதி (பாண்டியன்), டி.எஸ்.துரைராஜ் (கருடன்), கே.ஏ.தங்க வேலு (புண்ணியகோடி), ஏ.கருணாநிதி (குண்டுமணி) ஆகியோர் நடித்தனர்.

### படத்தின் கதை

கோயம்புத்தூரில் ஒரு பணக்காரக் குடும்பம். தாய் தந்தையரைத் தங்களின் சிறுவயதிலேயே பறிகொடுத்துவிட்ட இரண்டு குழந்தைகள். அவர்களில் அக்காள் பூமாலை தனது தம்பி பரந்தாமனை மிகவும் அன்போடு வளர்த்து ஆளாக்குவதற்காக, திருமணமும் செய்து கொள்ளாமல் வாழ்ந்து வருகிறாள். மேலும் பூமாலையின் ஒன்றுவிட்ட அக்காள் இறந்துவிட அவளது மகள் குமுதாவையும் (கிரிஜா) வளர்த்து ஆளாக்கும் பொறுப்பும் பூமாலைக்கு ஏற்பட்டு விடுகிறது. குமுதா பூமாலைக்குச் சொந்தமாக சென்னையில் உள்ள வீட்டில் தங்கிப் படித்து வருகிறாள்.

ஆனால், பூமாலையின் தம்பி பரந்தாமனோ ‘கருடன் பதிப்பகம்’ உரிமையாளன் கருடனுடன் சேர்ந்து மிகவும் மோசமான பித்தலாட்ட வேலைகளில் ஈடுபடுகிறான். எழுத்தாளர் பாண்டியன் எழுதிய ‘இல்லற ஜோதி’ எனும் நாவலைப் பதிப்பிப்பதாகப் பெற்று, துறவி எனும் புனைபெயரில் பரந்தாமன் எழுதியதாக வெளியிட்டு பேரும் புகழும் பணமும் சம்பாதிக்கின்றார்கள். இதனால், ஏமாற்றமடைந்த பாண்டியனுக்கும் ஏமாற்றிய பரந்தாமனுக்கும் இடையே மோதல் தொடங்குகிறது.

### தொழிலாளர் துரோகி

மில் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் போராட்டத்தினைப் பயன்படுத்தி, தொழிலாளர் தலைவனாகி ஏமாற்றுகிறான். ‘இல்லற ஜோதி’ நாவலை எழுதிய ஆசிரியன் நானே என இளம்பெண் பாமாவை (கிருஷ்ணகுமாரி) காதலித்து ஏமாற்றி, திருமண நாளன்று வெளியூருக்கு ஓடிச் செல்கிறான். பின்னர் அவளுக்கும் பாண்டியனுக்கும் திருமணம் நடக்க உள்ளது அறிந்து , முதல் நாள் இரவு பாமாவைச் சந்தித்துத் தன்னை ஒரு சாமியார் மயக்க மருந்து கொடுத்து கடத்திச் சென்று விட்டதால்தான், அவளைத் திருமணம் செய்துகொள்ள முடியாமல் போனதாகச் சொல்லி ஏமாற்றி, அவளது கோபத்தைத் தணித்து, பணம், நகையுடன் அவளை அழைத்துக் கொண்டு சென்னைக்கு ஓடிப்போகிறான். அதனால், பாண்டியன் திருமணம் நின்று போகிறது. பாமாவை சென்னைக்கு அழைத்துச் செல்லும் பரந்தாமன், அவளைத் தனியாக தவிக்கவிட்டுவிட்டு ஓடிப்போகிறான். அவனைத் தேடி அலைந்து, வாழ வழியற்ற பாமா பாலியல் தொழிலில் தஞ்சமடைகிறாள்.

இதற்கிடையே, பாண்டியனின் தந்தையான தொழிற்சங்கத் தலைவர் புண்ணியகோடி, தனது மகள் வயதுடைய ஊமைப் பெண் ராதாவை (டி.பி.முத்துலெட்சுமி) திருமணம் செய்து கொள்கிறார். இதனால் விரக்தியடைந்த பாண்டியன் மனக்கவலையில் எங்காவது செல்வோம் என இரயில் வண்டியில் ஏறு கிறான். அதே பெட்டியில் பூமாலை இருக்கிறாள். எழுத்தாளர் பாண்டியன்தான் அவன் என்பதை அறிந்துகொண்ட பூமாலை, தன்னை அறிமுகம் செய்து கொள்கிறாள். சென்னையில் உள்ள தங்கள் வீட்டில் சில நாட்கள் தங்கி கவலையை மறக்க வேண்டும் என்று கூறி, பாண்டியனை அழைத்துச் செல்கிறாள்.

அங்கு குமுதாவைச் சந்தித்துப் பழகும் பாண்டியனுக்கும் குமுதாவுக்கும் காதல் மலர்கிறது. ஒரு தலையாக பாண்டியனை விரும்பிய பூமாலை தனது காதலை மறைத்துக் கொண்டு இருவருக்கும் திருமணத்தை நடத்தி வைக்கிறாள்.

தனது கோயம்புத்தூர் வீட்டுக்குத் திரும்பும் பரந்தாமன் தனது மருமகள் குமுதாவை, பாண்டியன் திருமணம் செய்து கொண்டதை அறிந்து கோபமடைந்து துப்பாக்கியால் பாண்டியனைச் சுடுகிறான். உயிர் தப்பும் பாண்டியனை அழைத்துக்கொண்டு, குமுதா சென்னை வீட்டுக்கு வந்து விடுகிறாள்.



அடுத்து, மில் முதலாளியின் மகள் டாக்டர் உஷா மீது பரந்தா மன் ஆசை கொண்டு, அவளைக் கடத்திவர ஏற்பாடு செய்கிறான். ஆனால், உஷா தப்பிவிட அவளது வைர நகையை மட்டும் அடியாட்களின் மூலம் எடுத்து வந்து, தனது அக்கா மற்றும் குமுதா, அவரின் கணவன் பாண்டியன் ஆகியோர் மீது பழி சுமத்தி, சூழ்ச்சியாக சிக்க வைக்கிறான்.

பாண்டியன் சிறைக்குச் சென்றவுடன், கர்ப்பவதியான குமுதா வீட்டை விட்டுச் சென்று குழந்தை பெற்றுக் கொள்கிறாள். இதற்கிடையே, இவ்வளவு பிரச்சினைகளுக்கும் காரணம், பரந்தாமன்தான் என, புண்ணியகோடி பூமாலையிடம் சொல்ல, அவர் மில் முதலாளியிடம் மன்னிப்பு கேட்கச் சென்று காயமடைந்து, முதலாளி மகள் உஷாவால் காப்பாற்றப்பட்டு, அவளோடு தங்கியும் இருக்கிறார் பூமாலை. நள்ளிரவில் உஷாவின் அறைக்குச் சென்று அவளைத் தொடுகிறான் பரந்தாமன். ஆனால், அங்கிருப்பதோ அவனது அக்காள் பூமாலை. அதிர்ச்சியடையும் பரந்தாமனிடம், ‘உனக்குப் பெண்தானே வேண்டும், உஷாவை விட்டுவிடு, என்னை எடுத்துக் கொள் காமுகனே’ எனக் கடுமையாகத் திட்டுகிறாள்.

> கலைஞரின் வசனத்தை மீண்டும் மீண்டும் பேசி நடித்து, மக்கள் மனதில் சிவாஜி கணேசன் அழுத்தமாகப் பதிந்தார்.

### திருந்தும் வாழ்க்கை

பரந்தாமன் கதறியழுகிறான். வீட்டை விட்டு வெளியேறி, மனம் திருந்தி ஓர் அறையில் தங்கி, தான் செய்த பாவங்களுக்குப் பரிகாரமாகப் பாண்டியனையும் குமுதாவையும் சேர்த்து வைக்க நினைத்து ‘குமுதா எங்கிருக்கிறாய்?’ எனக் கேட்டு நாளிதழில் விளம்பரம் செய்கிறான்.

இதே நேரம் சுதந்திர நாளை முன்னிட்டு விடுதலையடைந்த பாண்டியன், தனது மனைவி குமுதாவைத் தேடியலைகிறான். பரந்தாமன் கொடுத்த விளம்பரத்தைப் பார்க்கும் பூமாலை, பரந்தாமன் குமுதாவுக்கும் கேடு செய்வதற்குத்தான் விளம்பரம் கொடுத்துள்ளான் என நினைக்கிறாள். ஆனால் அந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு பாமா அங்கு வந்து தனது வாழ்வைக் கெடுத்துத் தன்னை பாலியல் தொழிலில் தள்ளிய பரந்தாமனைப் பழி வாங்குவதற்காக துப்பாக்கியால் சுட முற்படுகிறாள்.

அங்கு நடக்கும் களேபரத்தில், குண்டு வெடித்து பாமா கீழே சாய்கிறாள். பூமாலை, பரந்தா மனைச் சுடுகிறாள். பரந்தாமனும் கீழே சரிந்து வீழும் நேரத்தில், தான் திருந்தி விட்டதையும் குமுதாவை, பாண்டியனுடன் சேர்த்து வைக்க தான் முயன்ற தையும் சொல்லிவிட்டு பரந்தாமன் இறந்து போகிறான். உண்மை யறிந்து பூமாலை கண்ணீர் வடிக்கிறாள்.

பூமாலைக்கு நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதிக்கிறது. அனைவரும் பரந்தாமனின் நிலையைக் கண்டு தங்களது வாழ்க்கையில் சரி தவறுகளைத் திரும்பிப் பாருங்கள்! திருந்துங்கள்! என்று சொல்லிவிட்டு, தூக்குத் தண்டனைக் களத்திற்குப் பூமாலை செல்வதுடன் படம் முடிவடைகிறது.

இதுவே திரும்பிப் பார் திரைப்படத்தின் கதை.

...காட்சி விரியும்

## கருத்துச் சுதந்திரத்தைக் காப்போம்!




கடந்த 11 ஆண்டுகளாகவே ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் பத்திரிகையாளர்கள் ஒடுக்கப்படுவதும், கருத்துரிமை நசுக்கப்படுவதும் தொடர்கதையாகி வருகின்றன. சமீபத்தில், ‘ஆபரேசன் சிந்தூர்’ குறித்த கட்டுரைக்காக, ‘தி வயர்’ ஊடகத்தின் ஆசிரியர் சித்தார்த் வரதராஜன், மூத்த பத்திரிகையாளர் கரண் தாப்பர் ஆகியோர் மீது தேசத்துரோக வழக்கு, அசாம் மாநில அரசால் பதியப்பட்டது. உச்சநீதிமன்றம் தடை விதித்த பிறகும், அசாம் காவல்துறை இருவருக்கும் சம்மன் அனுப்பியது பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது.

வழக்கு விவரம்கூட, சம்மனில் இணைக்கப்படாதது, இருவரையும் கைது செய்யும் உள்நோக்கம் கொண்டது என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் கண்டனம் தெரிவித்திருந்தார். இருவர் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்று உச்சநீதிமன்றம் மீண்டும் உத்தரவிட்டது. அதேபோல, சிறப்புத் திருத்தச் சட்டம் என்ற பெயரில், பீகாரில் தேர்தல் ஆணையம் 65 லட்சம் வாக்காளர்களை நீக்கியது தொடர்பான மோசடிகளைத் துணிச்சலாக அம்பலப்படுத்திய பத்திரிகையாளர் அஜித் அஞ்சும் மீது, பீகார் காவல்துறை வழக்குப் பதிந்துள்ளது.

இதை பத்திரிகையாளர்கள் மீதான ஒடுக்குமுறை என்று சுருக்கிப் பார்க்க முடியாது. இந்திய ஜனநாயகத்துக்கு, பாரதிய ஜனதா அரசு விடுத்துக்கொண்டிருக்கும் மாபெரும் சவால். இத்தகைய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, தமிழ்நாடு டிஜிட்டல் பத்திரிகையாளர் சங்கம், நாளை (08.09.2025) சென்னையில் கண்டன பொதுக்கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. காலை 9 மணி அளவில், சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகில் நடைபெறும் இந்தப் பொதுக்கூட்டத்தில், மூத்த பத்திரிகையாளர்கள் இந்து என்.ராம், நக்கீரன் கோபால் ஆகியோர் கண்டன உரையாற்றவுள்ளனர்.

முப்பதுக்கும் மேற்பட்ட டிஜிட்டல் ஊடகங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் இந்தக் கண்டன பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளனர். ஜனநாயகத்தைப் பாதுகாக்க, ஒன்றிணைந்து குரல் கொடுப்போம்!

## ஃப்ளாஷ்பேக்





குறிஞ்சி என்.சிவக்குமார்

### மறக்க முடியாத வாழ்த்து!

2016-ஆம் ஆண்டு, நான் மாவட்டப் பிரதிநிதியாகப் பணியாற்றியபோது, பவானி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கினார், நம் தானைத் தலைவர். அறிவிப்பு வந்த அன்று தலைவரைச் சந்தித்து, வாழ்த்து பெற்றபோது எடுத்த படம். தலைவர் அவர்களைப் பலமுறை சந்தித்திருந்தாலும், அன்று அவர், ‘வெற்றிபெற்று வாய்யா’ என வாழ்த்தி அனுப்பியது, மறக்க முடியாத நினைவாக உள்ளது.

– குறிஞ்சி என்.சிவக்குமார், மாநில இணைச் செயலாளர், கழக விவசாய அணி.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### செயற்குழுக் கூட்டம்!

07.11.60 இல் கழகச் செயற்குழுக் கூட்டம், மதுரையில் டாக்டர் அருணாசலம் இல்லத்தில் நடைபெற்றது. கழகத்தின் ஏடான, ‘நம்நாடு’ இதழ் பெரிய அளவில் கொண்டு வரப்பட வேண்டும் என்றும், தேர்தல் நிதிக்கு ஒவ்வொரு மாவட்டமும் ரூ. 25,000 நிதி திரட்டித் தர வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. மூன்றாவது மாநில மாநாட்டை 1961-ஆம் ஆண்டு மே மாதம் நடத்துவதற்கு, இந்தப் பொதுக்குழு முடிவு செய்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131